2017ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்டம்.

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
ஈரோடு மாநகராட்சி.

27)

1. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி.சாலையில் தினசரி அங்காடியில் பழைய மார்க்கெட் வணிக வளாக தரைத்தளக் கடைகளுக்கு (63 எண்ணிக்கை) சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P. No. 4305/2017. நாள். 21.02.2017–ம் தேதிய தீர்ப்பின் உத்திரவின்படி, ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 09.03.2017 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் ஏற்கனவே வைப்புத் தொகை செலுத்தியவர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு உச்ச ஏலக் கேள்வி மற்றும் உச்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள்.

| வ. எண். | கடை எண் | கடையின் அளவு | உச்ச ஏலக் கேள்வி கோரியவர் | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | 1 | 6'x6' அடி | எம். தமிழரசு (ஒப்பந்தப்புள்ளி) | 6333– |
| 2. | 2 | 6'x6' அடி | பி. கணேசன் (ஒப்பந்தப்புள்ளி) | 10002– |
| 3. | 3 | 6'x6' அடி | ஆர். கணேசன் | 9500– |
| 4. | 4 | 12'.4½" x6' அடி | ஏ. கௌதம் | 12800– |
| 5. | 6 | 12'.4½" x6' அடி | பி. கார்த்திக்குமார் | 12500– |
| 6. | 10 | 6'x6' அடி | எஸ். மீரான்சியியான் | 10300– |
| 7. | 11 | 6'x6' அடி | டி. ஜோசப்புஷ்பராஜ் | 3500– |
| 8. | 12 | 6'x6' அடி | காவியன் | 6400– |
| 9. | 13 | 12'.4½" x6' அடி | என். செந்தில்குமார் | 8500– |
| 10. | 14 | 6'x6' அடி | எஸ். நிஷான் | 9000– |
| 11. | 16 | 6'x6' அடி | பி. மணிகண்டன் | 8000– |
| 12. | 17 | 6'x6' அடி | பி. பிரபுதேவா | 9100– |
| 13. | 18 | 6'x6' அடி | இம்ராஸ்தீன் | 9000– |
| 14. | 23 | 6'x6' அடி | சின்னபொண்ணு | 5800– |
| 15. | 25 | 6'x6' அடி | ஆர்.எம். பாலு | 3500– |
| 16. | 27 | 6'x6' அடி | எஸ். தனகோடி | 5500– |
| 17. | 28 | 6'x6' அடி | என். கந்தசாமி | 16100– |
| 18. | 29 | 6'x6' அடி | ஜி. சந்திரகுமார் | 12100– |
| 19. | 30 | 6'x6' அடி | சதீஷ்குமார் | 10100– |
| 20. | 31 | 6'x6' அடி | சி. காவேரி | 19000– |
| 21. | 32 | 6'x6' அடி | எம். ராஜலிங்கமூர்த்தி | 11800– |
| 22. | 33 | 6'x6' அடி | டி.என். சுப்பிரமணியம் | 7650– |

# ERODE CITY MUNICIPAL CORPORATION

Dated 10.3.2017



| | | | | |
|---|---|---|---|---|
| 23. | 34 | 6'x6' அடி | எஸ். சசிகுமார் | 9700– |
| 24. | 35 | 6'x6' அடி | தினேஷ் | 9000– |
| 25. | 36 | 6'x6' அடி | என். நடராஜன் | 6950– |
| 26. | 37 | 6'x6' அடி | எச். முகமது கெய்சர் | 8450– |
| 27. | 38 | 6'x6' அடி | ஜி. சையது முஸ்தபா | 7300– |
| 28. | 39 | 6'x6' அடி | பி. ஸ்ரீதரன் | 7500– |
| 29. | 41 | 6'x6' அடி | வி. சக்திவேல் | 6900– |
| 30. | 42 | 6'x6' அடி | பி. கணேசன் | 6000– |
| 31. | 44 | 6'x6' அடி | ஏ. சபுராபேகம் | 7900– |
| 32. | 45 | 6'x6' அடி | எம். காஜா மொய்தீன் | 7900– |
| 33. | 46 | 6'x6' அடி | எம். முகமது அசன் அலி | 9400– |
| 34. | 48 | 6'x6' அடி | எஸ். தேவி | 9000– |
| 35. | 49 | 6'x6' அடி | எஸ். ஸ்ரீமீனாட்சி | 8000– |
| 36. | 50 | 6'x6' அடி | எம். பிரபு | 2500– |
| 37. | 51 | 6'x6' அடி | எஸ். சிவானந்தன் | 7350– |
| 38. | 61 | 6'x6' அடி | சி. மாதேஸ்வரன் | 6400– |
| 39. | 62 | 6'x6' அடி | ஜி. பிரியா கணேசன் | 2700– |
| 40. | 64 | 6'x6' அடி | கே. வெள்ளிங்கிரி | 2500– |
| 41. | 66 | 6'x6' அடி | எஸ். சிவராமன் | 2500– |
| 42. | 67 | 6'x6' அடி | பழனிசாமி | 6000– |
| 43. | 69 | 6'x6' அடி | சிராஜ்தீன் | 7000– |
| 44. | 70 | 6'x6' அடி | என். விவேகானந்தன் | 8100– |
| 45. | 71 | 6'x6' அடி | வி. செந்தில்குமார் | 2600– |
| 46. | 72 | 12'.4½" x6' அடி | எஸ். மஞ்சு ரெங்கநாதன் | 7700– |
| 47. | 73 | 6'x6' அடி | வருகை தர வில்லை | |
| 48. | 74 | 12'.4½" x6' அடி | எம். ராஜேஸ்குமார் | 9500– |
| 49. | 75 | 6'x6' அடி | எம். பார்த்திபன் | 2500– |
| 50. | 76 | 6'x6' அடி | ஜெ. சந்திரசேகரன் | 9100– |
| 51. | 77 | 6'x6' அடி | பி. பத்மநாபன் | 11500– |
| 52. | 78 | 6'x6' அடி | ஆர். சங்கர் | 2500– |

| | | | | |
|---|---|---|---|---|
| 53. | 79 | 6'x6' அடி | ஆர். செந்தில்குமார் | 3500– |
| 54. | 80 | 6'x6' அடி | கே. சாதிக்அலி | 4700– |
| 55. | 81 | 12'.4½" x6' அடி | கே. பாலமுருகன் | 8800– |
| 56. | 83 | 12'.4½" x6' அடி | என். அப்சல் அகமது | 3300– |
| 57. | 84 | 6'x6' அடி | ஏ. பிரபு | 4200– |
| 58. | 85 | 6'x6' அடி | கே. வசந்தா | 2550– |
| 59. | 86 | 6'x6' அடி | பி. ரமேஷ் | 6000– |
| 60. | 87 | 6'x6' அடி | என். செல்வகுமரன் | 12000– |
| 61. | 88 | 6'x6' அடி | ஜெயராமன் | 11400– |
| 62. | 89 | 6'x6' அடி | பி. தேவகி | 9000– |
| 63. | 90 | 6'x6' அடி | பி. கணேசன் | 7900– |

மேற்படி கடைகளில் 64, 66, 71, 75 ஆகியவற்றுக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு நபர் மட்டும் வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளப்பட்டது. மேலும் கடை எண்கள் 78 மற்றும் 83–க்கு ஒரே ஏலக் கேள்வி வரப்பெற்றுள்ளது.

மேற்படி மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 6'x6' அடி அளவுள்ள கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வியாக ரூ.2400–க்கு மேல் மற்றும் 12'.4½" x6' அடி அளவுள்ள கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வியாக ரூ.2700–க்கு மேல் வரப்பெற்றுள்ளது.

மொத்தமுள்ள 63 கடைகளில் 6'x6' அடி அளவுள்ள கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வியாக ரூ.2400–க்கு மேல் மற்றும் 12'.4½" x6' அடி அளவுள்ள கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வியாக ரூ.2700–க்கு மேல் வரப்பெற்றுள்ள 62 கடைகளுக்கு 01.04.2017 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்.

(அ1/11205/2009)

27) [illegible]

28)

2. ஈரோடு மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண்.15(e)–ல் குறிப்பிட்ட திடக்கழிவு உற்பத்தி செய்யும் வணிக நிறுவனங்களுக்கு பின்வரும் அட்டவணை–1ல் குறிப்பிட்டுள்ளவாறு உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

ERODE CITY MUNICIPAL CORPORATION

Dated ______

அட்டவணை– 1

உபயோகிப்பாளர் கட்டண விபர பட்டியல்

| வ. எண் | திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்கள் | நிகழ்வு 1க்கு / மாதம் 1க்கு | உபயோகிப்–பாளர் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| அ. | <u>குடியிருப்புகள்</u> | | |
| 1 | கட்டுமான பரப்பளவு 500 ச.அ வரை | மாதம் 1க்கு | 10.00 |
| 2 | கட்டுமான பரப்பளவு 501 ச.அ முதல்1200 ச.அ வரை | மாதம் 1க்கு | 25.00 |
| 3 | கட்டுமான பரப்பளவு 1201 ச.அ முதல் 2400 ச.அ வரை | மாதம் 1க்கு | 50.00 |
| 4 | கட்டுமான பரப்பளவு 2400 ச.அ மேல் | மாதம் 1க்கு | 100.00 |
| ஆ | <u>திருமண மண்டபம்</u> | | |
| 1. | 1000 கிலோ வரை திடக்கழிவுகளை உருவாக்கும் இனங்கள் | நிகழ்வு 1க்கு | 3000.00 |
| 2. | 1000 கிலோவிற்கு மேல் திடக்கழிவுகளை உருவாக்கும் இனங்கள் | நிகழ்வு 1க்கு | 6000.00 |
| 3. | தனியார் சமுதாயக் கூடங்கள் | நிகழ்வு 1க்கு | 500.00 |
| இ | <u>மருத்துவமனை (மருத்துவக் கழிவுகள் அல்லாத திடக்கழிவுகளுக்கு மட்டும்)</u> | | |
| 1. | 15 படுக்கைகள் வரை உள்ள இனங்கள் | மாதம் 1க்கு | 1000.00 |
| 2. | 15 படுக்கைகளுக்கு மேல் உள்ள இனங்கள் | மாதம் 1க்கு | 3000.00 |
| 3. | மருந்தகங்கள் | மாதம் 1க்கு | 200.00 |
| 4. | மருந்து மொத்த விற்பனையாளர்கள் | மாதம் 1க்கு | 500.00 |
| ஈ | <u>நிறுவனங்கள்</u> | | |
| 1. | தனியார் பள்ளிகள் / கல்லூரிகள் மற்றும் அதன் விடுதிகள் | மாதம் 1க்கு | 1000.00 |
| 2. | தனியார் அலுவலக வளாகங்கள் | மாதம் 1க்கு | 1000.00 |
| உ | <u>வணிகம்</u> | | |
| 1. | தேநீர் / பலகார கடைகள் | மாதம் 1க்கு | 300.00 |
| 2. | நடமாடும் உணவகங்கள் | மாதம் 1க்கு | 200.00 |
| 3. | உணவு விடுதிகள்(சிறியது) / மெஸ் | மாதம் 1க்கு | 1000.00 |
| 4. | பழங்கள் மற்றும் காய்கறிகள் (பழமுதிர் நிலையங்கள் ) விற்பனை | மாதம் 1க்கு | 4000.00 |
| 5. | பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை (சிறியது) | மாதம் 1க்கு | 500.00 |
| 6. | ஹோட்டல் / உணவகங்கள் (பெரிய அளவில்) / ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் / வணிக நிறுவனங்கள் (நாள் ஒன்றுக்கு 1000கிலோ வரை திடக்கழிவுகள் உருவாக்கும் இனங்கள்) | மாதம் 1க்கு | 5000.00 |
| 7. | ஹோட்டல் / உணவகங்கள் (பெரிய அளவில்) / ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் / வணிக நிறுவனங்கள் (நாள் ஒன்றுக்கு 1000கிலோக்கு மேல் திடக்கழிவுகள் உருவாக்கும் இனங்கள்) | மாதம் 1க்கு | 10000.00 |

| | | | |
|---|---|---|---|
| 8 | மீன் / கோழி / இறைச்சி கடைகள் | மாதம் 1க்கு | 200.00 |
| 9 | புரவிசன் ஸ்டோர் / அனைத்து வகை விற்பனை கடைகள் | மாதம் 1க்கு | 200.00 |
| 10 | திரையரங்கம் / பொழுதுபோக்கு மையங்கள் (திரை ஒன்றுக்கு) | மாதம் 1க்கு | 1500.00 |
| 11 | ஆடு / மாடு அறுக்கும் இடங்கள்( Slaughter houses) | மாதம் 1க்கு | 1000.00 |
| 12 | தொழில் கூடங்களில் இருந்து உருவாகும் டெக்ஸ்டைல் திடக்கழிவுகள் | நடை 1க்கு | 3000.00 |
| 13 | சிறுத்தொழில் கூடங்களிருந்து உருவாகும் திடக்கழிவுகள் மட்டும் | நடை 1க்கு | 3000.00 |
| 14 | ரெக்சின் (சோபா தயாரிப்பு மற்றும் தோல் பொருள் தயாரிப்பு) திடக் கழிவுகள் | மாதம் 1க்கு | 500.00 |
| 15 | எலெக்ட்ரானிக் / எலெக்ட்ரிக்கல் கடைகள் (தரம் -1) | மாதம் 1க்கு | 1000.00 |
| 16 | எலெக்ட்ரானிக் / எலெக்ட்ரிக்கல் கடைகள் (தரம் -2) | மாதம் 1க்கு | 500.00 |
| 17 | தையல் கடைகள் (தரம்-1) | மாதம் 1க்கு | 500.00 |
| 18 | தையல் கடைகள் (தரம்-2) | மாதம் 1க்கு | 200.00 |
| 19 | அச்சுக் கூடங்கள் (Printing press) | மாதம் 1க்கு | 200.00 |
| 20 | விளம்பர பலகை தயாரிப்பு (flex board) | மாதம் 1க்கு | 1000.00 |
| 21 | டெக்கரேட்டர்ஸ் / கிப்ட் ஷாப் | மாதம் 1க்கு | 500.00 |
| 22 | துணிக்கடைகள் (பெரிய அளவில்) | மாதம் 1க்கு | 5000.00 |
| 23 | துணிக்கடைகள் (நடுத்தரம் அளவில்) | மாதம் 1க்கு | 2000.00 |
| 24 | துணிக்கடைகள் (சிறிய அளவில்) | மாதம் 1க்கு | 200.00 |
| 25 | தனியார் பழுதுபட்டறை (இருசக்கர வாகனம் தவிர) | மாதம் 1க்கு | 500.00 |
| 26 | அழகு நிலையங்கள் (Beauty parlor) | மாதம் 1க்கு | 500.00 |
| 27 | மேற்கண்ட பட்டியலில் உட்படாத திடக்கழிவுகளை உருவாக்கும் இதர நிறுவனங்கள் (தரம்-1) | மாதம் 1க்கு | 500.00 |
| 28 | மேற்கண்ட பட்டியலில் உட்படாத திடக்கழிவுகளை உருவாக்கும் இதர நிறுவனங்கள் (தரம்-2) | மாதம் 1க்கு | 200.00 |
| ஊ | **தங்கும் விடுதிகள் (தனியார்)** | | |
| 1 | தங்கும் விடுதிகள் தரம் -1 | மாதம் 1க்கு | 1000.00 |
| 2 | தங்கும் விடுதிகள் தரம் -2 | மாதம் 1க்கு | 500.00 |
| 3 | தங்கும் விடுதிகள் (மாத வாடகை) / மேன்சன் மற்றும் ஹாஸ்டல் | மாதம் 1க்கு | 500.00 |
| எ | **இதர கழிவுகள்** | | |
| 1 | வெட்டப்பட்ட மரக்கழிவு (Tree Trunk Waste) | நடை 1க்கு | 500.00 |
| 2 | நர்சரி மற்றும் தோட்டக்கழிவு | நடை 1க்கு | 500.00 |
| 3 | கட்டிட மற்றும் இடிபாடுக் கழிவுகள் | நடை 1க்கு | 2000.00 |

ஈரோடு மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண்.15(e)ன்படி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 432ன் துணைவிதிகளை ஏற்படுத்தவும் (bye law) திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண்.15(zf)–ன்படி திடக்கழிவு மேலாண்மை விதிகளில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவாறு அபராதத் தொகை விதிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அட்டவணை–4</u>

<u>அபராதத்தொகை விவர பட்டியல்</u>

| வ. எண் | உட்பிரிவுகள் / துணை விதிகளின் விளக்கம் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய அபராதத்தொகை ஒவ்வொரு நிகழ்வுக்கும் ரூ. |
|---|---|---|
| 1. | பொது இடத்தில் / தனியார் சொந்தமான இடத்தில் / வண்டியிலிருந்து திடக்கழிவுகளை எறிதல். | 100.00 |
| | கடைகள்/வணிக நிறுவனங்களில் பொது இடத்தில் மற்றும் தனியார் சொந்தமான இடத்தில் திடக்கழிவுகளை எறிதல் | 200.00 |
| 2. | <u>திடக்கழிவுகளை மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள் என பிரித்து தனித்தனியாக வழங்காத இனங்கள்</u> | |
| | அ) தனி குடியிருப்பு (individual house holds) | 100.00 |
| | ஆ) அடுக்குமாடி குடியிருப்பு (Apartments / group house holds) | 1000.00 |
| | இ) பெருமளவு திடக்கழிவு உருவாக்குபவர் (Bulk generator) | 5000.00 |
| 3. | கட்டுமானம் இடித்தலில் உருவாகும் கழிவைக் குறிப்பிட்டவகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் | 5000.00 |
| 4. | தோட்டக்கழிவை, மரக்கழிவை பொது இடத்தில் சீர்படுத்தாமல் எறிதல் | 200.00 |
| 5. | குப்பை தொட்டிக்கு வெளியே திடக்கழிவை கொட்டுதல் திறந்த வெளியில் / சாக்கடையில் /ஓடையில் / நீர்நிலைகளில் திடக்கழிவுகளை எறிதல் | 500.00 |
| 6. | <u>திடக்கழிவை எரித்தல்</u> | |
| | அ) தனியார் தனது வளாகத்திற்குள் | 200.00 |
| | ஆ) தனியார் பொது இடத்தில் | 500.00 |
| | இ) வணிக நிறுவனங்களில் சேகரமாகும் கழிவுகளை எரித்தல் | 1000.00 |
| 7. | மீன், வளர்ப்புப் பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை(வீட்டில் உருவானது அல்லாதது) குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒப்படைக்காதிருத்தல் | 1000.00 |
| 8. | அ) கொள்கலம் / திடக்கழிவுக்கூடை இல்லாத விற்பனையாளர்க்கு / கூவி விற்பவர்க்கு | 100.00 |
| 9. | ஆ) குறிப்பிட்ட வகையில் திடக்கழிவைப் பிரிக்காமல் ஒப்படைக்கும் விற்பனையாளர்க்கு / கூவி விற்பவர்க்கு | 200.00 |
| 10. | பொதுக்கூட்டம் / பொது நிகழ்ச்சிக்குப்பின் கூட்டம் நடைபெற்ற இடத்தை 24 மணி நேரத்திற்குள் தூய்மைப்படுத்தவில்லையெனில் | வைப்புத் தொகைபறிமுதல் செய்யபடுவதுடன் கூடுதலாக ரூ.1000.00 அபராதமாக வசூல் செய்யப்படும். |

எச்1/5043/2012

அலுவலகக்குறிப்பு :–

அனுமதி வழங்கலாம்.

... மாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்டம்.

ஆணையாளர் (ம) தனி அலுவலர், ஈரோடு மாநகராட்சி.

29)

1. மத்திய அரசின் 14வது நிதிக் குழுவின் 2016-17ம் ஆண்டிற்கான செயல்பாட்டு மான்யம் (Performance Grant) ரூ.5,14,21,384/-ஐ ஈரோடு மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயமுறை உத்தரவு ந.க.எண்.14989/P1 /2016-1 நாள்.06.02.2017-ன் வாயிலாகஉத்தரவு பெறப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறையில் சேதமடைந்த சாலைகள் மற்றும் நடைபாதைகள் சீரமைப்பு செய்ய இந்த செயல்பாட்டு மான்யத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி மான்யத்தில் ஈரோடு மாநராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்று சேதமடைந்த சாலைகளை சீரமைப்பு செய்ய கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு

| S. No | Name of work | Length in Meter | Estimate Cost Rs. in Lakhs |
|---|---|---|---|
| 1 | Providing paver block pavements to Balanagar and Madheswaran nagar areas in ward no.3 | 180 | 30.00 |
| 2 | Restoration of Damaged BT Surface due to UGSS and rising of Storm Water Drain at Jinna Street, Valayakkara Street, Cavery Road and Chellabatcha Street | 635 | ~~71.00~~ 70.00 |
| 3 | Restoration of Damaged BT Surface due to UGSS and rising of Storm Water Drain at Ramasamy Street, Chokkanathar Street, Venkatachalam Street, Eswaran Koil Street and Sengoda Street, Vasuki Street – 1, Vasuki Street – 4 | 1136 | 81.00 |
| 4 | Restoration of of Damaged BT Surface due to UGSS and rising of Storm Water Drain at Thillai Nagar Opp IOB, Azagiri Singa Street, Vakkil Sami Street, Eswaran Koil Back Side, Kidangu Street, Perumal Koil Street, West Perumal Koil Street | 841 | 52.00 |
| 5 | Restoration of Damaged BT roads due to implementation of UGSS in Anaikattu MGR nagar pirivu to Palayapalayam Suthananthan nagar Arch in Zone-3 | 625 | 55.00 |
| 6 | Restoration of Damaged BT roads due to implementation of UGSS in Old poounthurai road in Zone- 3 | 675 | 90.00 |
| 7 | Restoration of Damaged BT roads due to implementation of UGSS in Mandapam street, Marimuthu street, Kiraikara Street, Madhava Krishna street, Krishna theater road at ward 56 in Zone-4 | 965 | 90.00 |
| 8 | Restoration of Damaged BT roads due to implementation of UGSS in S.S.Layout Lakshmi Narayana layout in Zone-4 | 660 | 70.00 |
| | Total | 5717 | ~~539.00~~ 538 |

எனவே மேற்கண்ட பணிகளை 14வது நிதிக் குழுவின் செயல்பாட்டு மான்யம் 2016-17ன் கீழ் மேற்கொள்ளவும் மான்யம் போக எஞ்சியுள்ள தொகையை பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

அனுமதி வழங்கலாம்.

இ1/1548/17

29) [illegible]

# ERODE CITY MUNICIPAL CORPORATION

**Dated** 24.3.2017



30)

2. Erode City Municipal Corporation has been selected through a competitive process for SMART City Mission initiative of Government of India. In Stage II, Erode City has to compete with other cities from across the country to make funding for the financial year 2017-18 by preparing a Smart City Proposal.

The implementation of the Mission at the City level will be done by a Special purpose Vehicle (SPV) created for the purpose. The SPV will plan, appraise, approve, release funds, implement, manage, operate, monitor and evaluate the Smart City development projects. Each Smart City will have a SPV which will be headed by a full time CEO and have nominees of Central Government, State Government and ULB on its Board.

ICRA Management Consulting Services Limited (IMaCS) has been appointed by GoTN and GoI as consultants in the preparation of the Smart City Proposal. The Consultants submitted the Smart City Proposal which included the following.

1. AREA BASED DEVELOPMENT PLAN

| | | Cost (Rs. cr.) |
|---|---|---|
| 1 | Canal Restoration- Perumpallam Canal & other facilities | ~~667~~ 693 |
| 2 | Basic Services -WS,Sewerage, SWD etc... | ~~200~~ 244 |
| 3 | Housing for all | ~~220~~ 150 |
| 4 | Energy Security and Sourcing | 80 |
| | Project Development and Related Expenses | 81 |
| | Sub-Total | 1,248 |

2. PAN-CITY INITIATIVE

| | | |
|---|---|---|
| 1 | SMART Water Grid including SCADA + Metering | 65 |
| 2. | CCTV surveillance + Command center | 20 |
| | Sub-Total | 85 |
| | TOTAL | 1,333 |

Subject is placed before the Council for approval of the Smart City Proposal Including the financial plan and also for the setting up of Special Purpose Vehicle as per the Smart City Mission guidelines.

office note.

Subject may be Approved.

இ1/5005/15

Approved.

31)

3 ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்டுள்ள பேருந்து நிலைய வணிக வளாக கடைகள் மற்றும் காவேரி ரோடு வணிக வளாக முதல் தளக் கடைகள் ஆகியவைகளுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 16.03.2017 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கோரப்பட்ட உச்ச ஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கேள்வி விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | ஏலதாரர் பெயர் | கண்காணிப்பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை (01.07.2016 முதல்) | அரசாங்க மதிப்பு ரூ. | உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ. | உச்ச ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 3 | திரு. எஸ். சரவணன் | 14212- | 15000- | - | 15000- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 4 | திரு. எஸ். சரவணன் | 14212- | 15000- | - | 15200- |
| 3. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 5 | திரு. எஸ். சரவணன் | 14212- | 15000- | - | 15000- |
| 4. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 8 | திரு. கே. குபேந்திரன் | 14212- | 15000- | 15100- | - |

வ.எண். 1-ற்கு ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ.15,000- வரப்பெற்றுள்ளது. ஏலத்தில் ரூ.8500-க்கு உச்ச கேள்வி கோரப்பட்டுள்ளது. ஏலக் கேள்வியை விட ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ.15000- அதிகமாக உள்ளது.

வ.எண். 2-ற்கு ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ.15,200- வரப்பெற்றுள்ளது. ஏலத்தில் ரூ.15100-க்கு உச்ச கேள்வி கோரப்பட்டுள்ளது. ஏலக் கேள்வியை விட ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ.15200- அதிகமாக உள்ளது.

வ.எண். 3-ற்கு ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ.15,000- வரப்பெற்றுள்ளது. ஏலத்தில் ரூ.7000-க்கு உச்ச கேள்வி கோரப்பட்டுள்ளது. ஏலக் கேள்வியை விட ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ.15000- அதிகமாக உள்ளது.

வ.எண். 4-ற்கு ஏலத்தில் ரூ.15100-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரப்பட்டுள்ளது

மேற்படிஏல இனங்களுக்கு கண்காணிப்பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை விட அதிகமாகவும், அரசாங்க மதிப்பும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வி மற்றும் ஏல உச்ச கேள்வியினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி இனங்களுக்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியவர்களுக்கு முன் அனுமதி பெற்று 01.04.2017 முதல் மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

31) [signature]

அ1/982/2017

32)

4. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்டுள்ள 31.03.2017 உடன் உரிம காலம் முடிவடையும் குத்தகை இனங்களுக்கு 01.04.2017 முதல் 31.03.2020 முடிய மூன்றாண்டு காலத்திற்கு மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 14.03.2017 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | ஏல இனம் | ஏல விவரம் | உச்ச கேள்வி கோரியவர் | 2016-2017-ம் ஆண்டு உரிமத் தொகை | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்தில் மினி பேருந்து நிறுத்துமிடத்தின் கீழ்புறமுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | மூன்றாவது ஏலம் | திரு. சி. பிரகாஷ் | ரூ.18,21,330- | ரூ.17,37,000- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | மூன்றாவது ஏலம் | திரு. வி. பழனிசாமி | ரூ.2,98,000- (2008-2009-ம் ஆண்டு உரிமக் கட்டணம்) | ரூ.1,60,200- |
| 3. | பேருந்து நிலையத்தில் இரண்டாம் பிளாட்பாரத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (பூக்கடை எண். 2) | மூன்றாவது ஏலம் | திரு. எஸ். குலாம் நபி ஆசாத் | ரூ.4,74,600- | ரூ.2,02,000- |

வ.எண். 1-க்கு மூன்றாவது ஏலத்தில் ரூ.17,37,000-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரப்பட்டுள்ளது. இது மேற்படி ஏல இனத்திற்கான மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.17,35,976-ஐ விட கூடுதலாக உள்ளது.

வ.எண். 2-க்கு மூன்றாவது ஏலத்தில் ரூ.1,60,200-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிக்கு ஒருவர் வைப்புத் தொகை செலுத்தியிருந்தார். ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை.

வ.எண். 3-க்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் ரூ.2,02,000-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு 2015-2016-ம் ஆண்டு பொது ஏலத்தில் ரூ.4,52,000/-க்கு உச்ச கேள்வி கோரப்பட்டு உரிமதாரரால் 2015-16 மற்றும் 2016-17 ஆகிய இரண்டு ஆண்டுகள் நடத்தப்பட்டு 01.04.2017 முதல் தொடர்ந்து நடத்த முடியாமல் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி ஏலத்தில் தற்போது 2014-15-ம் ஆண்டு உரிமத் தொகை ரூ.2,01,206- விட அதிகமாக ரூ.2,02,000-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரப்பட்டுள்ளது.

வ.எண். 1-க்கு மூன்றாவது ஏலமாக உள்ளதாலும் மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாக உள்ளதாலும் உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.17,37,000-ஐ ஏற்கவும், வ.எண். 2-க்கு மூன்றாம் முறையாக ஏலம் கோரியுள்ளமையால் உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.1,60,000-ஐ ஏற்கவும், வ.எண். 3 ஏல இனம் ஏற்கனவே உரிமதாரரால் தொடர்ந்து நடத்த முடியாமல் ஒப்படைக்கப்பட்டதாலும், 2014-15-ம் ஆண்டு உரிமத் தொகையை விட கூடுதலாக உள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.2,02,000-ஐ ஏற்கவும், மேற்படி இனங்களுக்கு 01.04.2017 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி இனங்களுக்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியவர்களுக்கு முன் அனுமதி பெற்று 01.04.2017 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

32) அங்கீகாரம்

அ1/160/2016

33) 5. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி.சாலையில் தினசரி அங்காடியில் பழைய மார்க்கெட் வணிக வளாக தரைத்தளக் கடை எண். 73–க்கு ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு மூன்றாவது முறையாக மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 16.03.2017 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் வைப்புத் தொகை செலுத்திய நான்கு நபர்கள் கலந்து கொண்டு ஏலக் கேள்வி கோரப்பட்டதில் திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி என்பவர் கீழ்க்கண்டவாறு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார்.

| வ. எண். | கடை எண் | கடையின் அளவு | உச்ச ஏலக் கேள்வி கோரியவர் | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | 1 | 6'x6' அடி | ஆர். கிருஷ்ணமூர்த்தி | 4100– |

ERODE CITY MUNICIPAL CORPORATION

மேற்படி மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 6'x6' அடி அளவுள்ள கடைகளுக்கு உச்ச ஏலக் கேள்வியாக ரூ.2400–க்கு மேல் வரப்பெற்றுள்ளதால் திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி என்பவரது உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.4100–ஐ ஏற்கவும், 01.04.2017 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி கடை எண். 73-க்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரிய திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு முன் அனுமதி பெற்று 01.04.2017 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

அ1/11205/2009

33) [signature]

34)

6. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2-க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இன வணிக வளாக கடைகளுக்கு அரசாணை எண்.92. நாள்.03.07.2007ன்படி அதன் 9 ஆண்டுகளுக்கான உரிம காலம் 30.06.2016 உடன் முடிவடையும் கடைகளுக்கு அரசாணையின் படி மேலும் 9 ஆண்டுகளுக்கு குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட, வெளிச்சந்தை மதிப்பிலான (MARKET RATE) திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவு நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் எனவும், தற்போதைய உரிமதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பொது ஏலத்தில் விடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மாநகராட்சி வருவாய் பிரிவு அலுவலர்களால் கண்டறியப்பட்ட சந்தை மதிப்பின் (MARKET RATE) அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாக 86 கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இம்மாமன்ற 23.02.2016-ம் தேதிய 427-ம் எண் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் தற்போதைய வாடகை மதிப்பு, சந்தை அடிப்படையிலான வாடகையினை விட கூடுதலாக இருக்கும் இனங்களுக்கு தற்போதைய வாடகையினையே நிர்ணயம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள். 03.07.2007–ன்படி குத்தகைக்கு விடும்பொழுது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) முதல் தடவையாக குத்தகைக்கு விடப்படும் போது நகராட்சியின் அசையா சொத்துக்கள் அனைத்தும் பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்பட வேண்டும்.

(ii) நகராட்சிக் கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைதன் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 15 (பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும். (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்)

எனவே சந்தை அடிப்படையிலான வாடகையினை விட கூடுதலாக இருக்கும் இனங்களுக்கு தற்போதைய வாடகையினை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட இனங்களுக்கு மேற்படி அரசாணையின்படி தற்போதைய வாடகையிலிருந்து 15% உயர்வு செய்து 01.04.2016 முதல் 31.03.2019 வரை மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு திருத்திய வாடகை

**ERODE CITY MUNICIPAL CORPORATION** Dated 24.3.2017

| வ. எண் | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை-யின் அளவு (ச.அ) | தற்போதைய மாத வாடகை (ரூபாய்) | மாமன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்ட வாடகை (ரூபாய்) | 15% உயர்வு வித்தியாசத் தொகை | 15% உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்படும் திருத்திய வாடகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (7) | | (8) |
| | | பேருந்து நிலைய கடைகள் | | | | | |
| 1. | 1 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 6235– | 6235– | 935-- | 7170– |
| 2. | 2 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 6388– | 6388– | 958- | 7346– |
| 3. | 3 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 7757– | 7757– | 1164– | 8921– |
| 4. | 4 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 7076– | 7076– | 1061– | 8137– |
| 5. | 6 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 8366– | 8366– | 1255– | 9621– |
| 6. | 7 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 8669– | 8669– | 1300– | 9969– |
| 7. | 8 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 8517– | 8517– | 1276– | 9793– |
| 8. | 9 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 7300– | 7300– | 1095– | 8395– |
| 9. | 10 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 12167– | 12167– | 1825– | 13992– |
| 10. | 21 | ஸ்ரீகண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் | 160 | 6240– | 6240– | 936– | 7176– |
| 11. | Steel box | பொது மேலாளர், ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் | 80 | 4629– | 4629– | 694– | 5323– |
| 12. | AS3 | பி.பி. சின்னசாமி | 220 | 23396– | 23396– | 3509– | 26905– |
| 13. | 28 | ஜீவா சொசைட்டி | 160 | 6164– | 6164– | 925– | 7089– |
| 14. | 29 | ஜீவா சொசைட்டி | 160 | 6164– | 6164– | 925– | 7089– |
| | | மேற்குபுற கடைகள் | | | | | |
| 15. | 13 | கந்தசாமி | 418 | 8188– | 8188– | 1228– | 9416– |
| | | காவேரி சாலை கடைகள் | | | | | |
| 16. | 2 | நாச்சிமுத்து | 142 | 6595– | 6595– | 989– | 7584– |
| 17. | 3 | கணேசன் | 142 | 4554– | 4554– | 683– | 5237– |

அலுவலகக்குறிப்பு

அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(+) [signature]

35)

7. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2-க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இன இரும்பு பெட்டி கடைகளுக்கு அரசாணை எண்.92. நாள்.03.07.2007ன்படி அதன் 9 ஆண்டுகளுக்கான உரிம காலம் 30.06.2016 உடன் முடிவடையும் கடைகளுக்கு அரசாணையின் படி மேலும் 9 ஆண்டுகளுக்கு குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட, வெளிச்சந்தை மதிப்பிலான (MARKET RATE) திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவு நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் எனவும், தற்போதைய உரிமதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பொது ஏலத்தில் விடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மாநகராட்சி வருவாய் பிரிவு அலுவலர்களால் கண்டறியப்பட்ட சந்தை மதிப்பின் (MARKET RATE ) அடிப்படையில் இரும்பு பெட்டிக் கடை 40 கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இம்மாமன்ற 30.08.2016-ம் தேதிய 549-ம் எண் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் தற்போதைய வாடகை மதிப்பு, சந்தை அடிப்படையிலான வாடகையினை விட கூடுதலாக இருக்கும் இனங்களுக்கு தற்போதைய வாடகையினையே நிர்ணயம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள். 03.07.2007–ன்படி குத்தகைக்கு விடும்பொழுது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) முதல் தடவையாக குத்தகைக்கு விடப்படும் போது நகராட்சியின் அசையா சொத்துக்கள் அனைத்தும் பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடப்பட வேண்டும்.

(ii) நகராட்சிக் கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைதன் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 15 (பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும். (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்)

எனவே சந்தை அடிப்படையிலான வாடகையினை விட கூடுதலாக இருக்கும் இனங்களுக்கு தற்போதைய வாடகையினை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட இனங்களுக்கு மேற்படி அரசாணையின்படி தற்போதைய வாடகையிலிருந்து 15% உயர்வு செய்து 01.07.2016 முதல் 31.03.2019 வரை மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு திருத்திய வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | கடையின் அளவு (ச.அ) | தற்போதைய மாத வாடகை (ரூபாய்) | மாமன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்ட வாடகை (ரூபாய்) | 15% உயர்வு வித்தியாசத் தொகை | 15% உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்படும் திருத்திய வாடகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (7) | | (8) |
| 1. | 1 | திரு. பி. நீதிமோகன் | 80 | 4025– | 4025– | 604– | 4629– |
| 2. | 2 | திரு. எஸ். சந்திரசேகரன் | 80 | 4232– | 4232– | 635– | 4867– |
| 3. | 10 | திரு. கே. பொன்னுசாமி | 80 | 3430– | 3430– | 515– | 3945– |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4. | 11 | திரு. விஜயாகுநாதன் | 80 | 3220– | 3220– | 483– | 3703– |
| 5. | 12 | திரு. ஷாஜஹான் | 80 | 6240– | 6240– | 936– | 7176– |
| 6. | 13 | திரு. மாயன் | 80 | 8255– | 8255– | 1238– | 9493– |
| 7. | 14 | திரு. பி. குமரேசன் | 80 | 9260– | 9260– | 1389– | 10649– |
| 8. | 15 | திரு. சி. ராஜா | 80 | 10638– | 10638– | 1596– | 12234– |
| 9. | 16 | திரு. சி. ராஜா | 80 | 11176– | 11176– | 1676– | 12852– |
| 10. | 17 | திரு. என். அப்பாஸ் | 80 | 2777– | 2777– | 417– | 3194– |
| 11. | 18 | திருமதி. எம். பௌமினா | 80 | 3440– | 3440– | 516– | 3956– |
| 12. | 22 | திரு. டி. சண்முகம் | 80 | 4025– | 4025– | 604– | 4629– |
| 13. | 23 | திரு. பி. குமார் | 80 | 5120– | 5120– | 768– | 5888– |
| 14. | 25 | திரு. கே. முருகேசன் | 80 | 4025– | 4025– | 604– | 4629– |
| 15. | 27 | திரு. நாச்சியப்பன் | 80 | 4025– | 4025– | 604– | 4629– |
| 16. | 31 | திருமதி. விஜயலட்சுமி | 80 | 4540– | 4540– | 681– | 5221– |
| 17. | 32 | திரு. பி. குமார் | 80 | 4130– | 4130– | 620– | 4750– |
| 18. | 33 | திரு. எஸ். கண்ணன் | 80 | 3310– | 3310– | 497– | 3807– |
| 19. | 34 | திரு. என். தங்கராஜ் | 80 | 4025– | 4025– | 604– | 4629– |
| 20. | 38 | திரு. பி. ரமேஷ் | 80 | 4111– | 4111– | 617– | 4728– |
| 21. | 39 | திரு. மெரிலின் புஷ்பராஜ் | 80 | 4107– | 4107– | 616– | 4723– |

<u>அலுவலகக்குறிப்பு</u>

அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

35)

அ2/281/2013

36)

8. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2-க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இன கடைகளுக்கு (அரசு நிறுவனங்கள்) அரசாணை எண்.92. நாள்.03.07.2007ன்படி அதன் 9 ஆண்டுகளுக்கான உரிம காலம் 30.06.2016 உடன் முடிவடையும் கடைகளுக்கு அரசாணையின் படி மேலும் 9 ஆண்டுகளுக்கு குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட, வெளிச்சந்தை மதிப்பிலான (MARKET RATE) திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவு நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் எனவும், தற்போதைய உரிமதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பொது ஏலத்தில் விடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மாநகராட்சி வருவாய் பிரிவு அலுவலர்களால் கண்டறியப்பட்ட சந்தை மதிப்பின் (MARKET RATE) அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாக 86 கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இம்மாமன்ற 19.09.2016-ம் தேதிய 665-ம் எண் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் தற்போதைய வாடகை மதிப்பு, சந்தை அடிப்படையிலான வாடகையினை விட கூடுதலாக இருக்கும் இனங்களுக்கு தற்போதைய வாடகையினையே நிர்ணயம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வி.சி.டி.வி. ரோடு கடைகள் | | | | | |
| 8. | 6 | மேலாளர், டாஸ்மாக் | 160 | 8366– | 8366– | 1255– | 9621– |
| 9. | 7 | மேலாளர், டாஸ்மாக் | 160 | 8366– | 8366– | 1255– | 9621– |
| | | காமராஜர் ரோடு கடைகள் | | | | | |
| 10. | 8 | உதவி இயக்குநர், பவானி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் | 153 | 5859– | 5859– | 879– | 6738– |

36) [handwritten initials]

<u>அலுவலகக்குறிப்பு</u>

அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

<u>அ2/281/2013</u>

37)

9. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இன 240 கடைகளுக்கு அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 03.07.2007–ன்படி 9 ஆண்டுகளுக்கான உரிமக்காலம் 30.06.2016 உடன் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கு அரசாணையின்படி மேலும் 9 ஆண்டுகளுக்கு குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட, வெளிச்சந்தை மதிப்பிலான (Market rate) திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவு நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் எனவும், தற்போதைய உரிமதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பொது ஏலத்தில் விடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் அரசு செயலர் கடிதத்தில் ஏற்கனவே உள்ள கடைகள் மற்றும் நிலங்களுக்கு அரசு ஆணை வெளியிடுவதற்கு முன்னர் அவர்கள் எத்தனை ஆண்டுகள் குத்தகை உரிமம் அனுபவித்திருந்தாலும் அரசு ஆணை (நிலை எண்) 92, வெளியிட்ட நாளான 03.07.2007–ல் இருந்து முதல் கட்டமாக 9 ஆண்டுகளும், பின்னர் மறு மதிப்பீட்டிற்கு பின் அடுத்த 9 ஆண்டுகள் குத்தகை நீட்டிப்பு வழங்கலாம் எனவும் கருதப்படுகிறது என்பதை அரசு உறுதி செய்கிறது என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் கடிதத்தில் குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிவுற்ற அசையா சொத்துக்களுக்கு அங்காடி மதிப்பீட்டின்படி குத்தகை வாடகை மறு நிர்ணயம் செய்யப்படும் போது

37)

மாநகராட்சி ஆணையரை தலைவராகக் கொண்டு குழு ஏற்படுத்தப்பட்டு, அச்சொத்துக்களுக்கான நில மதிப்பீட்டினை பதிவுத் துறையிலிருந்து பெற்று பொதுப்பணித்துறையால் நிர்ணயம் செய்யப்பட்ட விகிதப்படி வாடகை நிர்ணயம் செய்து, அதனை அரசாணைப்படி அங்காடி மதிப்பீட்டில் நிர்ணயம் செய்த வாடகையினை ஒப்பிட்டு சரிபார்த்து நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மாத வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு, பார்வை 3–ல் காணும் 30.12.2016–ம் தேதிய 6 எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டு, இம்மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாக 240 கடைகளுக்கு பார்வை 4–ல் காணும் செயல்முறை உத்திரவில் 01.07.2016 முதல் 31.03.2019 முடிய மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி 240 கடைகளில் 215 கடை உரிமதாரர்கள் புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை, உயர்வுத் தொகை மற்றும் வித்தியாசத் தொகையை செலுத்தவும் கடையை தொடர்ந்து நடத்தவும் ஒப்புக் கொண்டு சம்மதக் கடிதம் கொடுத்துள்ளார்கள். தற்போது 215 கடை உரிமதாரர்களில் பேருந்து நிலைய முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 18 மற்றும் 19 ஆகிய கடைக்காரர்கள் மாநகராட்சி வசம் ஒப்படைக்க கடிதம் கொடுத்துள்ளனர்.

| வ. எண். | கடை எண் | உரிமதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 18 | திரு. எஸ். கந்தவேல் |
| 2. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் (மேற்குபுறம்) கடை எண். 19 | திரு. எஸ். கந்தவேல் |

மேற்கண்டுள்ள 2 கடைகளின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடைகளை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

அ1/982/201

37) அனுமதி

## ERODE CITY MUNICIPAL CORPORATION

Dated 24.3.2017

38)

**10.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (கிழக்கு) 2016-17-ன்கீழ் மேற்கொள்ளும் பணிக்கு ந.க எண். 1416/2016/அ3, நாள்: 02.02.2017-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி வார்டு எண்.5 சூளைப் பகுதியில் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய மாதிரி சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி ரூ.40.00 இலட்சத்திற்கு 03.03.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) M/s. RR Thulasi Builders India pvt ltd | (+) 1.73 % அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம் |
| 2) M/s. GMS Elegant Builders I pvt ltd | (+) 6.94 % அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 1.73 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள **M/s. RR Thulasi Builders India pvt ltd** நிறுவனத்தினர் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/432/2017-ன்படி 03.03.2017 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 06.03.2017 தேதிய கடிதத்தில் இனம் எண்கள்-1, 2, 6, 7.1, 8, 9, 11 மற்றும் 13 ஆகியவற்றில் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.06 % குறைவான விலை விகிதம் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட (-)0.06 % குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள **M/s. RR Thulasi Builders India pvt ltd** நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்படி பணிக்கு முதன் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.06% குறைவான விலை விகிதம் உள்ள M/s. RR Thulasi Builders India pvt ltd நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, **M/s. RR Thulasi Builders India pvt ltd** நிறுவனத்தினர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

இ1/32/2017–ம1

38)

39)

**11.** ஈரோடு மாநகராட்சியின் வருவாய் நிதி மற்றும் மூலதன நிதி [Revenue & Capital Fund] குடிநீர் மற்றும் வடிகால் நிதி [Water Supply & Drainage Tax Fund] மற்றும் கல்விநிதி [Elementary Education Fund] ஆகிய மூன்று நிதிகளின் 2016–17ம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும் 2017–18ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீடும் தயாரிக்கப்பட்டுள்ளமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

அங்கீகரிக்கலாம்.

(பி1/6531/2016)

39)

# ERODE CITY MUNICIPAL CORPORATION

40)

12. உலக வங்கி நிதியுதவியின் கீழ் தமிழ்நாடு நீடித்த நகர்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மூலம் அரசாணை (பல) எண்.31 நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை நாள்.17.02.2015–ன் வாயிலாக மாதிரி நகரமாக உருவாக்குவதற்கு (Model City) ஈரோடு மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை உலக வங்கியின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தும் பொருட்டு M/S.INMAAS, சென்னை என்ற நிறுவனம் மூலம் நான்கு ஆண்டுகளுக்கு தொழில்நுட்ப வல்லுனர் குழு (Technical Expert Committee) அமைக்கப்பட்டுள்ளது.

**Model City திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ் வருமாறு.**

1. நகர்புறங்களுக்கு இலக்கு அடிப்படையில் மான்யங்கள் (Results Based Grants for Urban)
2. நகர்புற சேவைகளுக்கான முதலீடுகள் (Investment in Urban Service)
3. நகர்புற வளர்ச்சிக்கு தொழில்நுட்ப உதவிகள் (Urban sector Technical Assistance)

மேற்படி திட்டத்தின் நோக்கங்கள் செயல்படுத்த நியமிக்கப்பட்ட மேற்கண்ட தொழில்நுட்ப வல்லுனர் குழுவின் மூலம் இரண்டாம் ஆண்டின் (2016–17) இலக்குகளில் ஒன்றான நகர்புற வடிவமைப்பு அபிவிருத்தி திட்டம் (Urban Design Improvement Plan) உருவாக்குவதற்கு மாநகராட்சிக்குட்பட்ட ஒரு பகுதியை தேர்வு செய்வதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட துறைகள், பொதுமக்கள் ஆகியோருடன் 03.02.2017 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில் (STAKE HOLDERS MEETING) கீழ்கண்ட இடங்களில் செயல்படுத்துவதற்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

1. Prime roads and connecting GH junction area (பிரப் ரோடு GH ரோடு, பெருந்துறை ரோடு, நசியனூர் ரோடு, மேட்டூர் ரோடு சந்திப்பு)
2. காளை மாட்டு சிலை சுற்றுப் பகுதி
3. ஈரோடு பேருந்து நிலைய பகுதி
4. (i) மார்கெட் பகுதி மற்றும் பன்னீர் செல்வம் பூங்கா பகுதி
   (ii)சம்பத்நகர் பகுதி

மேற்கண்ட நான்கு இடங்களில் ஈரோடு மாநகரின் பிரதான பகுதியான "பன்னீர் செல்வம் பூங்கா சுற்றியுள்ள மார்க்கெட் பகுதி மற்றும் அருகில் உள்ள பெரியார் நகர் பகுதியினை இணைத்து" அபிவிருத்தி செய்தால் மிகுந்த பயனுடையதாக இருக்கும்.

ஆகவே ஈரோடு மாநகரின் பிரதான பகுதியான "பன்னீர் செல்வம் பூங்கா சுற்றியுள்ள மார்க்கெட் பகுதி மற்றும் அருகில் உள்ள பெரியார் நகர் பகுதியினை இணைத்து" நகர்புற வடிவமைப்பு அபிவிருத்தி திட்டம் (Urban Design Improvement Plan) தயாரித்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

அனுமதி வழங்கலாம்.

இ1/4188/2014

41)

3. ஈரோடு மாநகராட்சி, வீரப்பன்சத்திரம், மண்டலம்–3 வீரப்பம்பாளையம் புறவழி சாலை, ஈரோடு "அ" கிராமம், ரீ.ச.எண்.328/3ஏ2 புலத்தில் 1.08 எக்கர் அல்லது 4350 சதுர மீட்டர் மனை பரப்பில் பொழுது போக்கு அம்சங்கள் மற்றும் வணிக நோக்குடன் கூடிய, உத்தேச பேஸ்மெண்ட் தளம் (வாகனம் நிறுத்துமிடம்) தரை கீழ்த்தளம் (வாகனம் நிறுத்துமிடம்) மற்றும் மூன்று தளங்கள் கொண்ட ஐந்து (5) திரையாங்குகளுடன் மல்டி பிளக்ஸ் திரையரங்கம் கட்டிடம் கட்ட, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை திருமதி.க.மல்லிகா, க/பெ.கலைசெல்வன் அவர்கள் அனுமதி கோரியதன் பேரில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தனது ந.க.எண்.12280/2016/சி2, நாள்.13.06.2016 தேதிய கடிதத்தில், ஈரோடு மாநகராட்சியின் தடையின்மை சான்று தீர்மான நகல் கோரி உள்ளார்.

மேற்படி இடத்தில் பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் வணிக நோக்குடன் கூடிய உத்தேச கட்டிடம் பேஸ்மெண்ட் தளம் (வாகனம் நிறுத்துமிடம்) தரைகீழ் தளம் (வாகனம் நிறுத்துமிடம்) மற்றும் மூன்று தளங்கள் கொண்ட ஐந்து (5) திரையரங்குகளுடன் மல்டிபிளக்ஸ் திரையரங்கம் கட்ட, ஈரோடு மாநகராட்சியின் தடையின்மைச்சான்று வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி கோரப்படுகிறது.